ஏறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கருதுகிறார். ஏறிய விலை இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறதென்பது அவருக்குத் தெரியுமா? ஏதோ கொஞ்சம் கோதுமை, மைலோ வந்தது என்றால் விலை இறங்கிவிடுமா? இப்போது படி அரிசி 3½ ரூபாய்க்கு திருத்தணியில் விற்பது ஐயா அவர்களுக்குத் தெரியுமா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, திருத்தணியில் படி அரிசி 3½ ரூபாய்க்கு விற்கிறது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அரசாங்க அதிகாரிகளிடமிருந்து எங்களுக்கு வருகின்ற தகவல்களை வைத்துக்கொண்டு தான் நாங்கள் சொல்ல வேண்டும். செங்கற்பட்டு மாவட்டம் உபரி மாவட்டமாகும். இப்பொழுது பருவமழை இல்லாததால் சரியான அறுவடை இல்லை. இதனால் விலை சற்று ஏறியிருக்கிறது. அதற்காகத்தான் குடும்பக் கார்டு வழங்கப்பட்டிருக்கிறது.

பழநி நகரில் டோப்பா தொழிற்சாலை

* 35 வினா.—**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழநி நகரில் டோப்பா தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. கு. கிருணஷ்மூர்த்தி: தலைவர் அவர்களே, டோப்பா தொழிற்சாலை எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? (விடை இல்லை)

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உய்யக்கொண்டான் கால்வாய்

* 27 வினா.—**திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உய்யக்கொண்டான் பாசனக் கால்வாயைத் திருத்தியமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம் ஐயா பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போதிலிருந்து தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர்களின் குறிப்பு கிடைத்த பிறகுதான், வேலை தொடங்கப்படும்.